# பேராதனை பல்கலைகழக மாணவர்களுக்கான அறிவுறுத்தல்

அன்பார்ந்த மாணவ , மாணவிகளே!

நாங்கள் முகங் கொடுக்கும் இக்கட்டான இக்காலத்தில் உங்களுடைய கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாகவும் , துரிதமாகவும் செயற்படுத்துவதற்கும் , மாணவர்களின் நலன்புரி விடயங்களையும் இயன்றளவு நடைமுறைபடுத்துவதற்கும் பல்கலைகழக நிருவாகமும் , பீட நிருவாகமும் மிகுந்த அர்பணிப்புடன் கடமையாற்றுகின்றோம் என மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பேராதனை பல்கலைகழக மாணவர் ஒருவரின் வருடாந்த செலவு 7 ½ இலட்சம் செலவாகுவதுடன் , எமது பல்கலைகழகத்தில் மொத்தம் 13,000 மாணவர்கள் தற்போது கல்விகற்கின்றார்கள். எனவே பாடநெறிக்காலம் ஒரு நாளேனும் அதிகரித்தால் அது தங்களுக்கும் எங்களுக்கும் மேலதிக செலவீனமாகும். ஆகையால் நியமிக்கப்பட்ட நேரசூசிக்கு அமைய உங்களது பாடநெறியை பூர்த்தி செய்து தாங்கள் சமூகத்தில் இணைந்து கொள்வது மிகவும் முக்கியம் என்பதை நாம் அறிவோம்.

கோவிட் தொற்று காலத்தில் தாமதித்த கல்வி நடவடிக்கைகள் உரிய பீடங்கள் மற்றும் துறைகளின் மூலம் மிகவும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. எரிபொருள் நெருக்கடியுடன் ஏற்படும் தடைகளை இழிவளவாக்குவதற்கு எப்போதும் எங்களது கவனத்தை செலுத்துக்கின்றோம்.

எடுத்துக்காட்டாக,

1. கல்வி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக இணையவழி கற்பித்தலினூடாக மேற்கொள்கின்றோம்.

2. இரு வாரங்களுக்கு முன் 42 தொகுதியினர் பல்கலைகழகத்தினுள் நேரடி கல்வி நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொள்வதுடன் ஏனைய 5 தொகுதியினரும் இணையவழி தொடர்வதற்கு பீடங்கள் நடவடிக்கை எடுத்திருந்தது , விடுதிகளில் தங்கியிருந்த 7600 மாணவர்களுக்கு தேவையான தங்குமிட வசதிகளை வழங்கினோம்.

3. மிகவும் கஷ்டத்திற்கு மத்தியிலும் தங்களது களப் பயிற்சிகனை மேற்கொள்வதற்கு நடவடிக்கையினை ஏற்படுத்தியிருந்தோம்.

4. மாணவ , மாணவிகள் முகங்கொடுக்கும் பொருளாதார கஷ்டங்களையும் கருத்திற்கொண்டு பீடாதிபதிகளின் ஒத்துழைப்போடு மாணவர்களின் புலமைபரில் உதவித்தொகையினை ஏராளமான மாணவர்களுக்கு அண்மைகாலத்தில் பெற்றுக்கொடுத்தோம்.

5. சிற்றுண்டிச்சாலைகளில் புணரமைப்பு மற்றும் பொருட்களை பெற்றுக்கொடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

6. விடுதிகளில் புணரமைப்பு பணிகள் துரிதகரமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.அவ்வகையில் அருணாச்சலம் மற்றும் ஜேம்ஸ் பீரிஸ் மண்டபங்களில் மாணவர்களை இணைத்து கொள்வதற்கு தற்போது முடியுமானதாகவே உள்ளது. விஜேவர்தன மண்டபத்தில் ஒருத்தொகுதி புணரமைப்பு செய்யப்பட்டுள்ளதுடன், மற்றுமொரு பகுதி திருத்தம் செய்யப்படுகின்றது.

7. இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட பல கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் காலங்களிலும் மேற்கொள்வதற்கும் பரீட்சைகளை நடத்துவதற்கும் , செயன்முறை பயிற்சிகள போன்றவை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் உரிய பீடங்களிகளின் ஆலோசனைக்களைப் பெற்று நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்களது பாடநெறி , கல்வி நடவடிக்கைகள் குறித்து அறிந்து கொள்ள தேவையெனில் உங்களது பீடாதிபதியின் மூலம் விடயங்களை கேட்டறிந்து கொள்வதற்கு அனைத்து மாணவர்களுக்கும் வாய்பளிக்கபட்டுள்ளமையை தெறிவித்து கொள்கின்றோம்.

இந்த இக்கட்டான காலத்தில் உங்களது கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு கல்விசார் , கல்விசாரா ஊழியர்களின் அர்பணிப்பான சேவையை நாம் கணப்படுத்த வேண்டும்.

மேலும் இந்த இக்கட்டான காலம் மிக விரைவில் முடிவடைய வேண்டும் என பிராத்திக்கின்றோம்.

**துணை வேந்தர் போரதனை பல்கலைகழகம்**

**( மேற்குறிப்பிட்ட இவ்விடயங்கள் தொடர்பாக மேலதிக விளக்கங்களை பெற்றுக்கொள்ள மாணவர்கள் மற்றும் மாணவ இணைப்பாளர்கள் துணைவேந்தரின் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளலாம்)**

உங்களுடைய பெயர் , பீடம் , தொலைப்பேசி இலக்கத்துடன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது முறைப்பாட்டு வாயிற்கதவுக்கோ உங்கள் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு உங்களுடைய பிரச்சினை , தனிநபர் தகவல்கள் தொடர்பான **இரகசியங்களும் பாதுகாக்கப்படும்**.

vcoffice@gs.pdn.ac.lk

https://www.pdn.ac.lk/complaints.php

உங்களுக்கு என்னை சந்திப்பதற்கு தேவையெனில் கீழ்காணும் இலக்கத்தினை தொடர்பு கொண்டு அறிவியுங்கள்.

**(081-2392080)**